# உலக முடிவு சமீபந்தானா ?

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

ஆறாயிரம் வருஷக் காலமாக இந்த உலகம் ஒரே சீரான நிலைமையில் ஓடி கொண்டிருக்கிறது என்று நாம் சொல்லமுடியுமா?

**"முன் இருந்ததே இனிமேலும் இருக்கும்; முன் செய்யப்பட்டதே பின்னும் செய்யப்படும்; சூரியனுக்குக் கீழே நூதனமானது ஒன்றுமில்லை."** ~பிரசங்கி 1:9

இந்த உலகம் ஒரே மாதிரி போய் கொண்டிருக்கிறது, எந்தவிதமான ஒரு மாறுதலும் இல்லை என்று அநேகர் நினைக்கிறார்கள். ஆனால் திருமறை அப்படி சொல்லவில்லை. ஆறாயிரம் வருஷ காலத்தில், ஒரே ஒரு சமயத்தில், ஒரு பெரிய பிரளயம் வந்து இந்த உலகத்தை அழித்தது. அதற்கு பிறகு ஏறகுறைய நாளாயிரத்து ஐநாறு வருஷ காலமாக இந்த உலகத்தில் எந்த மாறுதலும் இல்லாமல் போய்க்கொண்டிருக்கிறது.

**"அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே? பிதாக்கள் நித்திரையடைந்தபின்பு சகலமும் சிருஷ்டிப்பின் தோற்றமுதல் இருந்தவிதமாயிருக்கிறதே என்று சொல்லுவார்கள். "**
**2 பேதுரு 3:4**

சிருஷ்டிப்பின் முதல் சகலமும் இருந்த வண்ணமாகவே இருக்கிறது. எந்த விதமான மாறுதலும் இல்லை.

**"எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று; ஆகையால் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, ஜெபம்பண்ணுவதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள். "1பேதுரு 4:7**

இன்றைக்கு முடிவு சமீபித்திருக்கிறது என்ற ஒரு கொள்கை வேதத்திலே எழுதப்பட்டிருக்கிறது. ஆண்டவர் வரபோகிறார், உலகத்தின் முடிவு இருக்க போகிறது என்று எத்தனையோ வருஷக்காலம் மக்கள் நினைக்கிறார்கள், பேசியும் வருகிறார்கள், ஆனால் ஏன் இன்னும் அந்த முடிவு வருவதில்லை? ஆண்டவருடைய வருகைக்கு முன்னே அநேக காரியங்களை குறித்து சொல்லியிருக்கிறார். அந்த வருகைக்கு முன்னே நடக்கவேண்டிய காரியங்கள் நடந்துவிட்டால்தான் அவருடைய வருகை இருக்கும் என்று நாம் தெரிந்துக் கொள்ளவேண்டும். ஆண்டவர் வருகிறார் வருகிறார் என்று அதிகமாக சொல்லுகிறோமே தவிர ஆண்டவரின் வருகைக்கும் உலகத்தினுடைய முடிவுக்கும் முன்னே என்ன சம்பவிக்கும் என்றும் வேதம் சொல்லுகிறது என்று நாம் மறந்து விடுகிறோம்.

டாரதி டாம்சன் என்று செல்லப்பட்ட ஒரு விஞ்ஞானி இந்த உலகத்தை பற்றி ஆராய்ச்சி செய்து எழுதினதாவது: இந்த உலகம் சீக்கிரமாக முடிவுக்கு வரும் என்பது நம்ப கூடியதாக இருக்கிறது என்றார்.

டாக்டர் எரால்ட் என்று சொல்லப்பட்ட அட்டாமீக் பாம் சைன்டீஸ்ட் எழுதினதாவது: அழிவின் அப்போஸ்தலானாக நான் இருக்கிறேன், நடக்கிற காரியங்களை பார்க்கும்போது நான் அதிகமாக பயந்து போனவனாக இருக்கிறேன் என்றார்.

ராப் எச்சிங் என்பவர் யுனிவர்சிட்டி ஆப் சிக்காகோ சேர்ந்த ஆசிரியர் எழுதுகிறதாவது: இன்னும் ஐந்து வருஷத்திற்குள்ளாக ஏதாவது ஒரு காரியம் பிரச்சனை தீர்க்க நடக்காவிட்டால், இந்த உலகம் சீக்கிரமாக முடிந்து என்பதை நான் நம்புகிறேன்.



அமெரிக்க நாட்டின் ஜனாதிபதியான ட்ருமன் நியு யார்க் டைம்ஸிலே அவர் எழுதினதாவது: நல்ல பொற்காலம் இந்த உலகத்தில் வரும் என்ற நம்பிக்கை போயே போய்விட்டது. இந்த உலகம் இன்றைக்கு சிதறிக்கொண்டிருக்கின்றன. இந்த உலகத்தில் ஏராளமான கஷ்டங்கள் இருக்கின்றன, அந்த கஷ்டங்களுக்க ஒரு விடிவில்லை என்றார்.

டாக்டர் ராபர்ட் கார்டன் என்று சொல்லப்பட்டவர் பிரசிடன்ட் ஆப் அமெரிக்கன் யுனிவர்சிட்டி எழுதினதாவது: இந்த உலகமானது சீக்கிரமாக முடிய போகிறது, மனிதனே இந்த உலக முடிவுக்கு கருவியை தேடி கொண்டான் என்றார்.

மிஸ்டர் நாயஸ் என்பவர் சாடர்டே யீவினிங் போஸ்ட் என்ற புத்தகத்திலே எழுதினதாவது: இந்த உலகத்தின் கடைசி காலத்தில் நாம் வசிக்கிறோம் என்றார்.

இந்த உலகத்தின் மக்களாகிய விஞ்ஞானிகள், அறிவாளிகள், பெரியவர்கள், இந்த உலக முடிவு சீக்கிரமாக வரும் என்பதை குறித்து மிக திட்டவட்டமாக பேசியிருக்கிறார்கள்.

திருமறை இதை பற்றி என்ன சொல்லுகிறது? வேத புத்தகத்திலே மூன்று அதிகாரங்களிலே அநேக இடங்களிலே சொல்லப்பட்டிருக்கிறது.

1. மத்தேயு 24~ஆம் அதிகாரம்
2. லூக்கா 21~ஆம் அதிகாரம்
3. மாற்கு 13~ஆம் அதிகாரம்

இந்த மூன்று அதிகாரங்களிலே ஆண்டவர் தாமே வாயை திறந்து, இந்த உலகத்தினுடைய முடிவை பற்றி பேசுகிறார். ஆகவே ஆண்டவர் இந்த உலகத்தின் முடிவை பற்றி சொல்லும்போது, ஒரு விசேஷமான காரியத்தை குறித்து பேசுகிறார். இந்த உலகத்தின் முடிவு எப்படிப்பட்டதாக இருக்கும்? இந்த உலகத்தின் முடிவு எப்போழுது வரும்? என்பதை குறித்து வெகு திட்டவட்டமாக பேசுகிறார்.

**"சூரியனிலும் சந்திரனிலும் நட்சத்திரங்களிலும் அடையாளங்கள் தோன்றும்; பூமியின்மேலுள்ள ஜனங்களுக்குத் தத்தளிப்பும் இடுக்கணும் உண்டாகும்; சமுத்திரமும் அலைகளும் முழக்கமாயிருக்கும். "** ~லூக்கா 21:25

பற்பலவிதமான அடையாளங்களை ஆண்டவர் அவரது பிள்ளைகளிடத்திலே சொல்லியிருக்கிறார். இயேசு கிறிஸ்து ஒரு முறை தேவாலயத்தை விட்டு ஒலிவ மலைக்கு போகும்போது, சீஷர்கள் அந்த தேவாலத்தினுடைய கட்டடங்களை காட்டி, எவ்வளவு பெரிய தேவாலயம், பிரமாண்டமான தேவாலயம், அழகாக கட்டப்பட்டிருக்கிறது என்றெல்லாம் அந்த தேவாலயத்தை பற்றி பெருமையாக சொன்னபோது, இயேசு அதற்கு: இவைகளை எல்லாவற்றையும் பார்க்கிறீர்களே,

இவ்விடத்தில் ஒரு கல்லின் மேல் ஒரு கல் இராதபடி எல்லாம் இடிக்கப்பட்டு போகும் என்று மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன் என்றார்.

உடனே சீஷர்களுக்கு அதிர்ச்சியும் ஆச்சரியமும் உண்டாயிற்று. எருசலேம் தேவாலயத்திற்கு ஏதாகிலும் நேரிடுமானால், இந்த உலகமே முடிந்து விடும் என்று யூதர்கள நினைத்தார்கள். ஆகவே இயேசு கிறிஸ்து ஒலிவ மலையிலே உட்கார்ந்திருக்கும்போது, சீஷர்கள் அவரிடத்தில் தனித்து வந்து, இவைகள்



எப்பொழுது சம்பவிக்கும்? உம்முடைய வருகைக்கும் உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன?மடி என்று எங்களுக்கு சொல்ல வேண்டும் என்றார்கள். அப்படியானால் உலக முடிவு, ஆண்டவருடைய வருகை, எருசலேம் தேவாலயத்தினுடைய அழிவு என்ற மூன்று கேள்விகளை ஒன்றாக இனைத்து இதற்கு அடையாளங்கள் என்ன என்று கேட்டனர்.

கிறிஸ்துவுக்கு பின்பு 66~ஆம் ஆண்டிலே ஒரு பெரிய ரோம படை எருசலேம் நகரத்தை முற்றுகைபோட்டது. சில மாதங்கள் கழித்து அந்த படை திரும்ப போய்விட்டது. திரும்ப

எழுபதாம் ஆண்டிலே அந்த ரோம படை வந்து முற்றுயிட்டது. டைடஸ் என்று சொல்லப்பட்டவன் அங்கு சேனாதிபதியாக இருந்து அங்கு அந்த படைகளை நடத்தினான. அந்த எருசலேம் பட்டணத்தை முற்றுபோட்டு, அந்த பட்டணத்தை முழுவதுமாக அழித்துவிட்டார்கள். அந்த எருசலேம் தேவாலயத்தைகூட ஒரு கல்லின் மேல் ஒரு கல் இராதபடி அழித்து போட்டார்கள். ஆண்டவர் சொன்ன அந்த தீர்க்கதரிசமானது திட்டவட்டமாக நிறைவேறியது. எருசலேம் தேவாலயம் அழிவையும் இந்த உலகத்தின் அழிவுக்கும் முன்னோடியாக வைத்திருக்கிறார். அந்த எருசலேம் தேவாலயம் அழிந்தபடியே இந்த உலகத்தின் முடிவும் இருக்கும் என்று ஆண்டவர் சொல்லுகிறார். அதற்கு அடையாளங்களையும் சொல்லியிருக்கிறார்.

**"அந்த நாளையும் அந்த நாழிகைகளையும் என் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான்; பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள். " ~மத் 24:36**

அப்படியானால் அது எப்பொழுது நடக்கும்? எந்த தேதி? எந்த மாதம்? எந்த வருடம்? என்பது ஆண்டவர் ஒருவருக்குதான் தெரியும். வேறு யாருக்கும் தெரியாது. ஆனாலும் ஆண்டவர் இந்த உலக அழிவுக்கு முன்னதாக மக்கள் எச்சரிப்பு அடைந்து இந்த உலக அழிவை எதிர் நோக்கி தப்புவிக்கவேண்டும் என்ற ஒரு எண்ணத்தோடு அநேக அடையாங்களை அங்கே கொடுத்திருக்கிறார். அந்த அடையாளங்கள் என்ன?

**"இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில், அநேகர் வந்து, என் நாமத்தைத் தரித்துக்கொண்டு: நானே கிறிஸ்து என்று சொல்லி, அநேகரை வஞ்சிப்பார்கள். " ~மத் 24:4,5**

இந்த உலகத்தின் முடிவிலே ஏராளமான வஞ்சனைகள் வரும் என்று ஆண்டவர் சொன்னார். இந்த உலகத்தில் அநேகர் வந்து தாங்கள் கிறிஸ்து என்று சொல்லி, தாங்கள் தீர்க்கதரிசிகள் என்று சொல்லி, தாங்கள் அப்போஸ்தலர்கள் என்று சொல்லி அநேகரை வஞ்சிப்பார்கள். எப்படி வஞ்சிப்பார்கள்?

**"ஏனெனில், கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள். " ~மத் 24:24**

ஆண்டவர் வருகைக்கு முன்னதாக இந்த உலகத்தின் எல்லா இடங்களிலும், பெரிய அற்புதங்களும் அடையாளங்களும் நடக்கும். ஆனால் அந்த அற்புதங்களும் அடையாளங்களும் கள்ள இடத்திலிருந்து அதாவது ஆண்டவருக்கு விரோதமான இடத்திலிருந்து வரும். ஆண்டவருக்கு விரோதமாக என்றால் என்ன? கர்த்தருடைய நாமத்தை தரித்து கொண்டு, ஆண்டவருடைய வேதத்தை கையில் வைத்து கொண்டு ஆண்டவரை பற்றி பிரசங்கம் பண்ணிக்கொண்டு, இருக்கிறவர்கள் மூலமாகவே கள்ளக்கிறிஸ்துக்களும், கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்புவார்கள்.



இன்றைக்கு உலகத்தில் எங்கு பார்த்தாலும் ஏராளமான அற்புதங்கள் அடையாளங்கள் நடக்கின்றன. மக்கள் கோவில்களுக்கு எவ்வளவு தூரமானாலும் பிரயாணம் செய்து கடவுள்கள தரிசித்து அந்த அற்புதங்களை பெற்று கொள்ளத்தக்கதாக பிரயாசப்படுகின்றனர். எல்லா மார்க்கங்களிலுமே அற்புதங்கள் ஏராளமாக இந்த காலத்தில் நடக்கிறது. அந்த அற்புதங்களின் மூலமாக இந்த காலத்தில் ஒரு பெரிய வஞ்சனை நடக்கிறது என்று ஆண்டவர் சொல்லுகிறார்.

யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள். கலங்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். இவைகளெல்லாம் சம்பவிக்க வேண்டியதே. ஆனாலும் முடிவு உடனே வாராது. இந்த உலக தோற்றமுதல் இன்று வரை யுத்தங்கள் நடந்துகொண்டேதான் இருக்கிறது. ஒவ்வொரு நாடும் அடுத்த நாட்டோடே சண்டைபோட்டு கொண்டுதான் இருக்கிறது. ஆகவே சண்டை என்பது இந்த உலகத்தின் முடிவின் அடையாளம் அல்ல.

ஜனத்திற்கு விரோதமாய் ஜனமும், ராஜியத்திற்கு விரோதமாய் ராஜியமும் எழும்பும்.

இது உலக யுத்தத்தை குறிக்கிறது. ஆண்டவருடைய வருகைக்கு முன்னதாக அநேக நாடுகள் ஒன்றொடு ஒன்று சண்டை போடும் என்று சொல்லும்போது அங்கு உலக யுத்தத்தை குறிக்கிறது. ஏராளமான நாடுகள் ஒன்றாக சேர்ந்து சண்டை போடுகிற உலக யுத்தத்தை குறிக்கிறதாக இருக்கிறது. அந்த உலக மகா யுத்தங்கள் 1914~ஆம் ஆண்டு வந்தது. அதில் ஆறு கோடி மக்கள் சண்டையிட்டு ஒரு கோடி மக்கள் இறந்து போனார்கள். இரண்டு கோடி மக்கள் காயப்பட்டார்கள். இருபதினாயிரம் கோடி ருபாய் இந்த யுத்தத்திற்கு செலவிட்டார்கள். இருபது வருஷத்திற்கு அப்புறமாக, 1939~ஆம் ஆண்டிலே திரும்பவும் இந்த இரண்டாவது மகா யுத்தம் வந்தது. அந்த யுத்தத்திலே முதல் மகா யுத்தத்தை விட எட்டு மடங்கு அழிவு வந்தது.

இப்பொழுது உலகம் மூன்றாவது மகா யுத்தத்திற்கு ஆயத்தப்படுத்திக்கொண்டிருக் கிறது. திருமறையிலே இந்த மூன்றாவது மகா யுத்தம் எங்கே நடக்கும்? யார் யாருக்கு நடக்கும்? என்றெல்லாம் எழுதப்பட்டிருக்கிறது.

இந்த யுத்தங்கள் ஏராளமாக நடந்து கொண்டிருந்தாலும், ஜாதிகளுக்கு விரோதமாக ஜாதி, ஜனங்களுக்கு விரோதமாக ஜனம் என்ற யுத்தங்களும் வந்து கொண்டிருக்கிறது. ஆதிக்காலத்தில் சிலோனில் நம்முடைய தமிழர்கள் சிங்களர்கள் எத்தனையோ ஆண்டு காலம் சகோதரர்களாக வாழ்ந்தார்கள். இன்றோ அங்கு பகையும் சண்டையுமாகி எல்லை மீறி போய்விட்டது. இன்னும் அநேக நாடுகளிலே இதே சண்டைகள் நடந்துகொண்டு வருகிறது. நேசத்தோடும் பாசத்தோடும் பழகி, அன்போடும் அருளோடும் வாழ்ந்துவந்த மக்கள் மத்தியிலே இனப்பிரச்சனை, ஜாதி பிரச்சனை, மொழி பிரச்சனைகள் வந்து, நாடுகளுக்கு நாடுகள், ஜாதிகளுக்கு ஜாதிகள், ஜனங்களுக்கு விரோதமாக ஜனங்கள் என்ற பெரிய காரியங்கள் இன்றைக்கு உலகத்தில் நடந்து கொண்டிருக்கிறது. இது ஆண்டவருக்கு வருவதற்கு ஒரு அடையாளமாக இருக்கிறது. இந்த உலகத்தினுடைய முடிவுக்கு ஒரு அடையாளமாக இருக்கிறது.



இப்படிப்பட்வைகள் சில வருஷங்களுக்கு முன்னதாக இருந்ததில்லை. இப்படிப்பட்ட காரியங்கள் இப்பொழுது அதிகரித்து கொண்டே வருகிறது. ஆண்டவருடைய வருகை சீக்கிரமாக வந்துவிட்டது என்பதற்கு இவைகளெல்லாம் நமக்கு ஒரு எச்சரிப்பின் அடையாளமாக இருக்கிறது.

இந்த இரண்டாவது மகா யுத்தத்திலே ஆறு லட்சம் எழுபத்தி ஆறாயிரம் கோடி ரூபாய் செலவழித்தார்கள். அந்த யுத்தத்தின் முடிவிலே ஆகஸ்டு மாதம் ஆறாம் தேதி 1945 வருஷத்திலே நாகசாகி ஈரோஷிமா என்ற இடத்திலே அணுகுண்டை முதன் முதலாவதாக போட்டு ஒரு லட்சம் பேருக்கு மேலாக அழிந்து போனார்கள். அப்படியானால் இன்றைக்கு இந்த மூன்றாவது மகா யுத்தம் எப்படிப்பட்டதாக இருக்கும்? பயங்கரமான அந்த யுத்தம் இந்த உலகத்தின் கடைசி நாட்களிலே வைக்கப்பட்டிருக்கிறது.

“பஞ்சங்களும் கொள்ளை நோய்களும் பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும்” இந்த பஞ்சம் எத்தனையோ வருஷக்காலமாக உலகத்திலே இருக்கதான் செய்கிறது. ஆனால் இன்றைக்கு நாட்கள் கடந்து போக ஏராளமான பஞ்சங்கள் வந்து விட்டது. இந்த இரண்டாவது உலக யுத்தத்திற்கு பிறகு, ஏறகுறைய மூன்றில் இரண்டு பங்கு மக்கள், பசித்தவர்களாகவே வேலைகளுக்கு போகிறார்கள் என்று சன்டே ஈவினீங் போஸ்ட் என்ற புத்தகத்திலே எழுதியிருக்கிறது. 1943 வது ஆண்டிலே மாத்திரம் அறுபது கோடி மக்கள் பஞ்சத்தினாலே மிகவும் கஷ்டப்பட்டார்கள். இன்றைக்கு ஜன பெருக்கம் ஏராளமாக பெருகி கொண்டே போகிறது. அணுகுண்டு இந்த உலகத்தை அழிப்பதற்கு முன் இந்த உணவு பிரச்சனை உலகத்தை அழித்து விடும் ஒரு விஞ்ஞானி எழுதினார். நாம் நன்றாக சாப்பிட்டு வாழவேண்டுமென்றால், ஒவ்வொரு மனுஷனுக்கும் இரண்டரை ஏக்கர் நிலம் வேண்டும் என்று விஞ்ஞானிகள் கணக்கு போட்டிருக்கிறார்கள். இந்த உலகத்திலே நாற்பது கோடி ஏக்கர் நிலம் பயிர் செய்யக்கூடிய நிலங்களாக இருக்கிறது. அப்படியானால் ஒவ்வொரு மனுஷனுக்கும் இரண்டரை ஏக்கர் நிலம் வேண்டும் என்றால், இந்த உலகத்தில் ஐநாறு கோடி மக்கள் இருக்கிறார்களே, அந்த நாற்பது கோடி ஏக்கர் எப்படி இந்த ஐநாறு கோடி மக்களுக்கு சரியாக இருக்குமா? ஆகவே வருங்காலத்திலே உணவு பற்றாகுறை ஏராளமாக இருக்கும். ஜன விருத்திக்கும் உற்பத்திக்கும் ஒரு பெரிய போராட்டமாக இருக்கும்.

இந்த உலம் வருங்காலத்தில் தன்னுடைய சக்தியை இழந்து, குறைவான ஒரு பலனை கொடுத்து கொண்டிருக்கிறது. நாம் குடிக்கிற தண்ணீரும் ஓரளவாகதான் இருக்கிறது. மக்களோ ஏராளமாக அதிகரித்துக்கொண்டு போகிறார்கள். இன்னும் சிறிது நாட்களுக்குள்ளாக நம்முடைய உணவு பற்றாகுறை அதிகமாக ஏற்படும். தண்ணீர் பற்றாகுறை எல்லா இடங்களிலும் ஏற்படும். மழை அதிகமாக பெய்வது கிடையாது. ஏதோ இந்தியாவில் கடவுளுடைய கிருபையினாலே சில ஆண்டுகள் மழை பெய்ததுண்டு ஆனாலும் மற்ற இடங்களில் அப்படியில்லை. ஒரு வேளை இந்தியாவில் எப்பொழுது அது மாறுமோ என்பது நமக்கு தெரியாது. விஞ்ஞானத்துவமாக நாம் பார்க்கும்போது இந்த உலகம் ஒரு பெரிய பஞ்சத்தை சந்திப்பதை தவிர்க்கமுடியாது. அந்த பஞ்சம் வரும்போது அது பயங்கரமாக இருக்கும். ஆயிரக்கணக்கானோர் அதனால் அழிந்து போவார்கள் என்று விஞ்ஞானிகள் சொல்லுகிறார்கள். இப்படியாக உலகலாவிய பெரும் பஞ்சம் வருமென்று ஆண்டவர் சொன்னார்.



உலகத்தின் ஏராளமான பேர் இந்த பஞ்சத்தினாலே அவதிப்படுவார்கள் என்று ஆண்டவர் சொன்னார். இது உலகத்தின் முடிவுக்கு அடையாளம் என்பதையும் ஆண்டவர் சொன்னார். இந்த உலகத்தின் சரித்திரத்தில் ஏராளமான கொள்ளை நோய்களை நாம் பார்க்கிறோம். ஆனாலும் இப்பொழுது வந்திருக்கிற கொள்ளை நோய்கள் விசித்திரமாகவும் கேள்விப்படாததுமாய் இருக்கிறது.

இந்த முதலாம் உலக யுத்தத்திற்கு பிறகு இன்புலவன்சா என்ற ஒரு காய்ச்சல் வந்தது. இந்த காய்ச்சல் சிங்கபூர் பக்கமாக துவங்கி உலகம் முழுவதும் பரவினது. அந்த சாய்ச்சல் உலகத்தை மூன்று முறை சுற்றி வந்தது. ஏராளமான பேர் அதற்கு பலியானார்கள். இப்பொழுது தோன்றுகிற வியாதிகள் முன்பைபோல கிடையாது. இந்த வியாதிகள் உலகமுழுவதும் தாக்குகிறது. உலகம் முழுவதும் விஞ்ஞானம் அதிகமாக வளர்ந்து மருத்துவ கலையில் ஏராளமான வளர்ச்சி ஏற்பட்டாலும், இன்றைக்கு அந்த படிப்பாளர்களுக்கு விளங்காத புதிது புதிதான வியாதிகள் தோன்றுகிறது.

எந்த காலத்திலும் இல்லாத இருதய நோய்கள் இந்த காலத்தில் வந்து கொண்டிருக்கிறது. திடீர் திடீரென்று மக்கள் இறந்து கொண்டிருக்கிறார்கள். புற்று நோய் இந்த உலகத்தின் மக்களை மிகவும் தாக்கி வருகிறது. ஏராளமான

மக்கள் இந்த புற்று நோயால் அவதிப்பட்டு கொண்டிருக்கிறார்கள். எயிட்ஸ் நோய்க்கும் இன்னும் சரியானபடி மருந்து கண்டுப்பிடிக்கமுடியவில்லை. இப்படியாக உலகம் முழவதும் அவைகள் பறவி மக்களை பாதிக்கிறது.

இவைகள் மனிதர்களை கொல்லுகிற வியாதிகள், அவைகளுக்கு சரியானபடி மருந்து கண்டுபிடிக்க முடிவதில்லை. ஆகவே லட்சக்கணக்கான மக்கள் இந்த நோய்களால் பலியாகி மாண்டு போகிறார்கள் என்று நாம் அறிகிறோம். இப்படிப்பட்ட வியாதிகள் இன்னும் அதிகதிகமாக இந்த கடைசிக்காலத்திலே வரும் என்று ஆண்டவர் சொன்னார். அது இந்த உலக முடிவுக்கு அடையாளமாக இருக்கும் என்று ஆண்டவர் சொல்லுகிறார்.

பூமியதிர்ச்சிகள் பல இடங்களிலே ஏற்படும் என்று ஆண்டவர் சொன்னார். 1946 வருஷத்திலே பெரிய பூமியதர்ச்சி உண்டாகி ஒரு லட்சம் பேர் இறந்து போனார்கள். 1920 ஆம் வருஷத்திலே சீனாவிலே பூமயதிர்ச்சி ஏற்பட்டு இருபதினாயிரம் பேர் இறந்து போனார்கள். முதலாவது நூற்றாண்டிலே 15 பூமியதிர்ச்சிகள் உண்டாயிற்று. 16~ஆம் நூற்றாண்டிலே 253 பூமியதிர்ச்சிகள் உண்டாயிற்று. 18~ஆம் நூற்றாண்டிலே 640 பூமியதிர்ச்சிகள் உண்டாயிற்று. 19~ஆம் நூற்றாண்டிலே 1119 பூமியதிர்ச்சிகள் உண்டாயிற்று. இப்பொழுது ஒரு நாளைக்கு இரண்டு பூமியதிர்ச்சிகள் உலகத்திலே உண்டாகிறது. ஆண்டவர் பூமியதிர்ச்சிகள் உண்டாகம் என்று சொன்னார். இந்த பூமியதிர்ச்சிகள் ஆண்டவருடைய வருகைக்கு அடையாளமாக இருக்கும் என்று சொன்னார்.

ஐசுவரியவான்களே, கேளுங்கள், உங்கள்மேல் வரும் நிர்ப்பந்தங்களினிமித்தம் அலறி அழுங்கள். உங்கள் ஐசுவரியம் அழிந்து, உங்கள் வஸ்திரங்கள் பொட்டரித்துப்போயின. உங்கள் பொன்னும் வெள்ளியும் துருப்பிடித்தது; அவைகளிலுள்ள துரு உங்களுக்கு விரோதமாகச் சாட்சியாயிருந்து, அக்கினியைப்போல உங்கள் மாம்சத்தைத் தின்னும். கடைசிநாட்களிலே பொக்கிஷத்தைச் சேர்த்தீர்கள். **யாக் 5:1~3**



இந்த கடைசிக்காலத்தில் அதிகமாக பண ஆசை உண்டாயிருக்கும். பொருளாசை இருக்கும் என்று ஆண்டவர் சொல்லுகிறார்.

சில வருஷங்களுக்கு முன்பாக பணக்காரர்கள் கொஞ்சம் பேர்தான் இருந்தார்கள். இன்றைக்கு லாட்டரி சீட்டு, குதிரை பந்தயம், என்று அநேக காரியங்கள் வந்து, திடிரென்று ஏராளமான பேர் பணக்காரர்களாக ஆகிவிடுகிறார்கள். இங்கிலாந்து நாட்டின் சொத்து முழவதும் 84 சதவீதமான பணம், 7 பேர் கைகளில் இருக்கிறது என்று கணக்கிட்டிருக்கிறார்கள். அமெரிக்க நாட்டின் 92 சதவீதமான பணம், 12 பேர் கைகளில் இருக்கிறது. இப்படியாக மனிதர்கள் பணத்தின் மீது குறியாக இருக்கிறார்கள்.

முதலாளிகளுக்கும் தொழிளாலிகளுக்கும் பெரிய பிரச்சனைகள் இந்த உலகத்தில் உருவாகும். வேலை நிறுத்தம் போராட்டங்கள் நடக்கும் என்று வேதம் சொல்லுகிறது. ஆகவே இந்த போராட்டங்கள் கொஞ்ச காலத்திற்கு முன்பாகதான் உலகத்தில் வந்திருக்கிறது. ஆண்டவர் இதை குறித்து சொல்லுகிறதாவது: உலகத்தின் கடைசி நாட்களிலே முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் பெரிய ரோட்டம் வரும், அவர்கள் மத்தியிலே பெரிய பிரச்சினைகள் உருவாகும், அந்த போராட்டங்கள் பெரிய கூக்குரலாக அநேக இடங்களிலே மாறி அது ஓயாத வாதையைபோல இருக்கும் என்று ஆண்டவர் சொல்லுகிறார். அது அப்படியே இன்று நடக்கிறது என்று நாம் பார்க்கிறோம்.

**“அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்துபோம்.” ~மத் 24:12**

இந்த கடைசி நாட்களிலே அக்கிரமம் அதிகரிக்கும். அந்த அக்கிரமம் மிகுதியாகிறதை பார்த்து நல்லவர்கள் சோர்ந்து போவார்கள் என்று வேதம் சொல்லுகிறது.

**“மேலும், கடைசிநாட்களில் கொடியகாலங்கள் வருமென்று அறிவாயாக. எப்படியெனில், மனுஷர்கள் தற்பிரியராயும், பணப்பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக்கிறவர்களாயும், தாய் தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவர்களாயும், நன்றியறியா தவர்களாயும், பரிசுத்தமில்லாதவர்களாயும், சுபாவ அன்பில்லாதவர்களாயும், இணங்காதவர்களாயும், அவதூறு செய்கிறவர்களாயும், இச்சையடக்கமில்லாதவர்களாயும், ெ காடுமையுள்ளவர்களாயும், நல்லோரைப் பகைக்கிறவர்களாயும், துரோகிகளாயும், துணிகரமுள்ளவர்களாயும், இறுமாப்புள்ளவர்களாயும், தேவப்பிரியராயிராமல் சுகபோகப் பிரியராயும், தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்; இப்படிப்பட்டவர்களை நீ விட்டு விலகு.” ~2 தீமோ 3.1~5**

இந்த கடைசிக்காலத்திலே இன்றைக்கு சமுதாயத்தில் என்ன காணப்படுகிறதோ அவைகளை அன்றைக்கே ஆண்டவர் அப்படியே விளக்கமாக கொடுத்துவிட்டார். அந்த வசனங்களிலே 19 காரியங்களை குறித்து ஆண்டவர் பேசுகிறார். இந்த 19 காரியங்களும் சமுதாயத்திலே நிரம்பிவழிகிறது. முந்தின காலங்களிலே அப்படியில்லை. அன்று தகப்பன், வீட்டுக்கு வரும்போது பிள்ளைகள் எழுந்து நிற்பார்கள். தகப்பனை கண்டால் பயப்படுவார்கள். அப்படிப்பட்ட காரியங்களை நாம் இப்பொழுது பார்க்கிறதில்லை. ஆகவே எல்லாமே மாறிபோய்விட்டது. இன்று தேவ பிரியராயிராமல் சுகபோக பிரியராயிருக்கிறார்கள். இன்று ஆண்டவருடைய நாமத்தை சொல்லுகிறோம். ஆலயத்திற்கு செல்கிறோம், ஆனால் தெய்வத்தின் மீது நாம் பிரியமற்றிருக்கிறோம். உலகத்தில்மீதுதான் பிரியம் வைத்திருக்கிறோம். தேவ பக்தியின் வேஷத்தை தரித்து கொண்டு மனிதன் திரிகிறான் என்று வேதம் சொல்லுகிறது. வேதம் வாசிப்பதில் வேஷம், தெய்வப்பாடல் பாடுவதில் வேஷம், காணிக்கை கொடுப்பதிலும் வேஷம் போடுகிறோம்.



பக்தியுள்ளவர்கள்போல நடித்து, கிரியைகளில்லாமலும், பக்திக்குரிய வாழ்க்கை வாழாமல் இருக்கிறோம். இப்படிப்பட்ட பாவங்கள் கடைசிக்காலத்தில் இருக்கும் என்று வேதம் சொல்லுகிறது.

சபைகளிலேயும் மற்ற இடங்களிலேயும் நல்லவர்கள் இந்த பெரிய அக்கிரமங்களை பார்த்து, அவர்களுடைய அன்பு தணிந்துபோய் விடுகிறது. என்ன வந்தாலும் நம்முடைய அன்பு, உற்சாசம் தணிந்துபோகக்கூடாது. மற்றவர்கள் தப்பு செய்தாலும் நாம் செய்யகூடாது. அவரவர்கள் தனி தனியே கடவுளுக்கு கணக்கு ஒப்புகொடுக்கவேண்டும். எந்தவிதத்திலும் நாம் உற்சாகமாக இல்லாமல் போய்விடக்கூடாது. நம்முடைய வாழ்க்கையை

இறைவனோடு உண்மையாக தொடர்பு வைத்துக்கொள்ளவேண்டும் என்று ஆண்டவர் விரும்புகிறார்.

**“நோவாவின் நாட்களில் நடந்ததுபோல மனுஷகுமாரனுடைய நாட்களிலும் நடக்கும். நோவா பேழைக்குள் பிரவேசித்த நாள்வரைக்கும் ஜனங்கள் புசித்துக் குடித்தார்கள், பெண்கொண்டு கொடுத்தார்கள்; ஜலப்பிரளயம் வந்து எல்லாரையும் அழித்துப்போட்டது.”**

~லூக்கா 17:26,27

நோவாவின் காலத்தில் சமுதாயம் எப்படியிருந்ததோ, அதேவிதமாக இருக்கும். அப்படியானால் நோவாவின் காலத்தில் எப்படியிருந்தது?

**“மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும், கர்த்தர் கண்டு, தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்; அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது.”** –ஆதி 6:5,6

அந்த நோவா காலத்து மக்கள் பிரமாண்டமான அறிவுடையவர்களாக இருந்தார்கள். அவர்கள் ராட்சதர்களை போல வளர்ந்திருந்தார்கள். அறிவு அதிகமாக வளர ஆரம்பித்தபோது அவர்களது பாவங்களும் கொடூரமாக வளர்ந்தது. அன்று பட்டயத்தை வைத்து கொண்டு பத்து அல்லது இருபது பேரை வீழ்த்திவிடலாம். இன்று ஒரு அணுகுண்டை போட்டு லட்சக்கணக்கான பேரை கொன்றுவிடலாம். ஆகவே அறிவானது பயங்கரமான பாவத்தை செய்து விடும் என்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டும். ஆகவே அந்த நோவா காலத்தின் மக்கள் இந்த சமுதாயத்தின் மக்களை விட ஏராளமான அறிவு இருந்தது. அவர்களது நினைவுகள் எப்போதுமே தீமையானதாகவே இருந்தது. ஆனால் கடைசிநாட்களிலே நித்தமும் மனிதர்களின் நினைவுகள் தீமையானதாக இருக்கும் என்று வேதம் சொல்லுகிறது. இதுதான் உலகத்தின் முடிவின் அடையாளம் என்று ஆண்டவர் சொன்னார். மற்றும் இன்னொரு அடையாளமும் இருக்கிறது.

**“அந்நாட்களின் உபத்திரவம் முடிந்தவுடனே, சூரியன் அந்தகாரப்படும், சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும், நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழும், வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும்.”** – மத்தேயு 24:29

200 ஆண்டுகளுக்கு முன்பாக ஒரு நாள் சூரியன் இருளாக போய்விட்டது என்று சரித்திரத்தில் எழுதப்பட்டிருக்கிறது. நட்சத்திரகளும் வானத்திலிருந்து விழுந்தன என்று சரித்திரத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இனியும் திரும்பவும் அதே போல நடக்கும் என்று நாம் அறிந்துகொள்ளவேண்டும்.



ஆண்டவருடைய வருகையிலே இந்த அண்டசராசரங்கள் அசைக்கப்படகூடியதாக இருக்கும் என்று வேதம் கூறுகிறது.

**“இதைப் புறஜாதிகளுக்குள் கூறுங்கள்; யுத்தத்துக்கு ஆயத்தம்பண்ணுங்கள், பராக்கிரமசாலிகளை எழுப்புங்கள்; யுத்தவீரர் எல்லாரும் சேர்ந்து ஏறிவரக்கடவர்கள். உங்கள் மண்வெட்டிகளைப் பட்டயங்களாகவும், உங்கள் அரிவாள்களை ஈட்டிகளாகவும் அடியுங்கள்; பலவீனனும் தன்னைப் பலவான் என்று சொல்வானாக. சகல ஜாதிகளே, நீங்கள் சுற்றிலுமிருந்து ஏகமாய் வந்து கூடுங்கள்; கர்த்தாவே, நீரும் அங்கே உம்முடைய பராக்கிமசாலிகளை இறங்கப்பண்ணுவீராக.”**

**~யோவேல் 3:9~11**

இந்த புறஜாதிகள் என்று சொல்லும்போது, இது கிழக்கிய நாடுகளைகுறித்து பேசுகிறது. அந்த நாடுகள் பெலவீனமான நாடுகளாக இருந்தன. அப்படி தூங்கி கொண்டிருந்த அந்த நாடுகள் எழும்பி, தாங்கள் பலவான்கள் என்று சொல்லி யுத்தத்திற்கு தங்களை ஆயத்தப்படுத்துவார்கள் என்று வசனம் சொல்லுகிறது. தூங்கிகொண்டிருந்த சீனா விழித்தெழும்பி இன்று பங்கரமான நாடாக மாறிவிட்டது. இன்னும் ஜப்பான், இந்தியா போன்ற நாடுகள் எழும்பி பயமுறுத்தி கொண்டிருக்கிறது.

**“தானியேலாகிய நீயோவென்றால், முடிவுகாலமட்டும் இந்த வார்த்தைகளைப் புதைபொருளாக வைத்து வைத்து, இந்தப்புஸ்தகத்தை முத்திரைபோடு; அப்பொழுது அநேகர் இங்குமங்கும் ஓடி ஆராய்வார்கள், அறிவும் பெருகிப்போம் என்றான்.” –தானி 12:4**

ஆறாயிர வருஷங்களாக எண்ணை விளக்குகளை வைத்து கொண்டிருந்தோம், குதிரை வண்டிகளை வைத்திருந்தோம், இப்படிப்பட்ட வாழ்க்கை முறைகள் திடிரென்று மாறி விட்டது. இப்படியாக ஒரு பெரிய சக்தி மனித வாழ்க்கையிலே புகுந்துவிட்டது. இன்று மிக பிரமாண்டமான அறிவு வளர்ச்சி இந்த உலகத்திலே எல்லை மீறி போய்விட்டது. மருத்துவத்திலே நினைத்து பார்க்கமுடியாத அளவிற்கு சிகிச்சை செய்து பெரிய சாதனைகளை படைக்கிறார்கள். ஆகவே ஆண்டவர் சொன்ன தீர்க்கதரிசனம் சரியாக நிறைவேறுகிறது. கடைசியாக

**“ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும்.” –மத் 24:14**

இன்று உலகமெங்கும் ஏராளமான சுவிசேஷ கூட்டங்கள் நடைபெறுகிறது. அவர் சீக்கிரமாக வந்து தன்னுடைய ராஜியத்தை ஸ்தாபிக்க போகிறார் என்ற நற்செய்தி உலகமெங்கும் பிரசங்கிக்கப்படும். யாரும் எனக்கு தெரியாது என்று சொல்ல கூடாத அளவிற்கு சுவிசேஷகம் பரவி போகும். அவருடைய செய்திகளை கேட்கிறவர்கள் அனைவரும் பாக்கியவான்கள். இப்படியாக உலகமெங்கும் சாட்சியாக பிரசங்கிக்கப்படும்போது, இந்த உலகத்தின் முடிவு வரும் என்று ஆண்டவர் சொல்லுகிறார்.

நாம் ஆண்டவருடைய வருகைக்கு முன்பாக ஆயத்தப்படுத்தி கொள்ளவேண்டும். நாம் இந்த உலகத்தில் பார்க்கிற காரியங்கள் யாவும் நமக்கு கர்த்தர் சொன்னது நினைவில் வரவேண்டும். அவர் சொன்ன வருகையின் தீர்க்கதரிசனங்கள் நிறைவேற ஆராம்பித்துவிட்டது.

**“அப்படியே இவைகளையெல்லாம் நீங்கள் காணும்போது, அவர் சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறார் என்று அறியுங்கள்.” –மத் 24:33**

பரலோகத்தின் ராஜியத்தை இந்த பூமியில் ஆண்டவர் ஸ்தாபிக்க போகிறார்.



அப்படி ஸ்தாபிக்கும்போது அந்த பரிசுத்த கூட்டத்தில் நாம் இருப்போமா? அல்லது புறம்பே தள்ளப்பட்டு அக்கினியினால் நாம் அழிந்து போவோமா? இன்று சாத்தான் நம்மை வஞ்சித்துகொண்டே தான் இருப்பான். ஏனென்றால்

அவனுக்கு அழிவு அன்றே நிச்சயிக்கப்பட்டுவிட்டது. அவன் அழியபோகிறான் என்று அவனுக்கு நன்றாகவே தெரியும். அதற்காக அந்த பொறாமையினாலே அவனோடுகூட நம்மையும் அழித்துவிட வேண்டும் என்று வெறித்தனமாக செயல்படுகிறான். தேவன் நம்மீது அன்பு வைத்ததினால் நாம் அந்த அழிவிலிருந்து தப்பித்துகொள்ள வழி திறந்தார். உள்ளே பிரவேசிப்பதும் பிரவேசியாமலிருப்பதும் நம் ஒவ்வொரு முடிவிலும் முயற்சியிலும் இருக்கிறது. அன்றிலிருந்து இன்று வரை கர்த்தர் வருவார் என்றுதான் பிரசங்கித்து கொண்டிருக்கிறோம்.

இனி வரும் காலத்தில் நம்மை வஞ்சிக்கதக்க கள்ள அப்போஸ்தலர்களும், இன்னும் கிறிஸ்துவை போலவே வருவார்கள் என்றும் வேதம் சொல்லுகிறது. நாம் வஞ்சிக்கப்பட்டு விடாமல் ஜாக்கிரதையாக இருப்போம். காலம் கடைசி காலம். இன்னும் நாம் தாமதிக்காமல் மனந்திரும்பி இரட்சிப்படைவோம்.


வேத அறிஞர்கள் சொல்லுகிறதாவது: ஆண்டவருடைய வருகைக்கு முன்னதாக, அவருடைய வருகையைபோலவே ஒரு வஞ்சனையின் வருகை இருக்கும்.

சாத்தான் ஒளியின் தேவதூதனுடைய வேஷத்தை தரித்து கொண்டு, ஆண்டவரை போல வருவான். சாத்தான் ஒரு ஒளியின் தேவதூதனாய் இருக்கிறான். பிரகாசிக்கிற ஒரு தேவதூதனாயிருக்கிறான். அவனுக்கு விடிவெள்ளி என்று பெயர் இருக்கிறது. அவர்கள் விழுந்துபோனவர்கள் என்று தேவன் அவர்களது வெளிச்சத்தை எடுத்துவிடவில்லை. மனிதன்மீது இருந்த வெளிச்சத்தை அவன் பாவம் செய்த பிறகு அந்த வெளிச்சத்தை அவர் எடுத்து விட்டார். ஆகவே தேவதூதர்கள் இன்றும் வெளிச்சத்தோடுதான் இருக்கிறார்கள். சாத்தானுக்கோ பிரமாண்டமான வெளிச்சமிருக்கிறது. அவன் தன்னுடைய மூன்றில் ஒரு பங்கான தேவ தூதர்களோடு வானத்திலிருந்து எக்காள சத்தத்தோடு ஆண்டவரின் வருகை மாதிரியே வானத்திலிருந்து வருவான் என்று வேதம் சொல்லுகிறது. மிக சீக்கிரமாக இது நடக்கதான் போகிறது.

அவன் எந்த ரூபத்தோடு வருவான்?

இன்றைக்கு நம்முடைய வீடுகளிலே இயேசு கிறிஸ்துவின் உருவப்படம் இருக்கிறது. அதேபோல அவன் உருவெடுத்து கொண்டு வருவான். இயேசு கிறிஸ்துவின் படங்கள் இன்றைக்கு உலகம் முழுவதும் ஒரே விதமான படங்கள் தான் இருக்கிறது. அது அவருடைய உருவம் அல்ல என்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டும். அந்த நாட்களிலே அவர் உலகத்தில் இருந்தபோது அவரை யாரும் வரைந்து வைக்கவில்லை. அந்த காலத்தில் ஜனங்கள் படத்தை வரையவேண்டும் என்று விசேஷமாக நினைக்கவுமில்லை. ரோமன் கத்தோலிக்க திருசபை உருவானபோது இயேசு இந்த மாதிரிதான் இருந்திருப்பார் என்று நினைத்து ஒரு படத்தை வரைந்து இயேசு இவர் தான் என்று வெளிப்படுத்தினார்கள்.





ரோமன் கத்தோலிக்க சபையில், இயேசு கிறிஸ்து முகம் இரத்தத்தால் இருந்த போது அவரது முகத்தை ஒரு துணியால் துடைத்த போது அவருடைய முகம் அப்படியே அந்த துணியில் அச்சடித்ததுபோல பதிந்து விட்டது. அந்த உருவத்தை வைத்துதான் அவருடைய முகத்தை வரைகிறோம் என்று சொல்லுகிறார்கள். நம்முடைய முகத்திலே கொஞ்சம் இரத்தத்தை தெளித்து, அதை ஒரு துணியால் பதித்தால் நம்முடைய முகம் அந்த துணியில் அச்சாகுமா என்று நாம் ஒவ்வொருவரும் சோதித்து பார்போமாக. இவைகள் கட்டுக்கதைகள்.

ஆனால் ஆண்டவரை ஒரே ஒரு சரித்திர ஆசிரியர் பார்த்து எழுதியிருக்கிறார். அவர் சொன்னதாவது: இயேசு கிறிஸ்து உயரமாக இருந்தார், அவருக்கு குருந்தாடி இருந்தது, அவர் நெற்றியின் மத்தியிலே கோடு எடுத்து அவரது முடி கழுத்து வரைக்கும் விழுந்து கிடந்தது, அவர் நல்ல உடல்கட்டுள்ளவராக இருந்தார். அவருடைய முகத்தில் ஒரு சிறிய சிறிப்பு எப்பொழுதும் காணப்பட்டது. இதைதான் அந்த சரித்திர ஆசிரியர் பார்த்து எழுதியிருக்கிறார்.

அதை தவிர இயேசு கிறிஸ்துவை பற்றி எந்தவிதமான ஒரு சரித்திர அத்தாட்சியும் கிடையாது.

ஆகவே சாத்தான் அந்த பிரமாண்டமான தெய்வீக ஒளியோடு வரும்போது, இந்த எல்லோரும் வைத்திருக்கும் படத்தின் உருவத்தில்தான் வருவான். இதுதான் ஆண்டவருடைய உருவம் என்று நினைக்கிறவர்கள், நம்பி ஏமாந்து போவார்கள். அவரைபோல இந்த பூமியில் சாத்தான் சென்னையில் வந்து இறங்கினால், அவரை பார்த்தால் இயேசு கிறிஸ்து மாதிரியே இருக்கும், அருமையாக இனிமையாக பேசுவார், வேத வசனத்தை எடுத்து பேசுவார், ஜனங்களை அன்போடு தாங்குவார், அற்புதங்களை செய்வார், குணமாக்குவார், இயேசு கிறிஸ்து செய்த எல்லா காரியத்தையும் அவரும் செய்யும்போது, உலகத்தார் இவர்தான் இயேசு கிறிஸ்து என்று நினைப்பார்கள்.

ஆனால் ஆண்டார் சொல்லுகிறார்,

**“இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில், அநேகர் வந்து, என் நாமத்தைத் தரித்துக்கொண்டு: நானே கிறிஸ்து என்று சொல்லி, அநேகரை வஞ்சிப்பார்கள்.”** – மத்தேயு 24:4,5

**“அப்பொழுது, இதோ கிறிஸ்து இங்கே இருக்கிறார், அதோ அங்கே இருக்கிறார் என்று எவனாகிலும் சொன்னால் நம்பாதேயுங்கள். ஏனெனில், கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள். இதோ, முன்னதாக உங்களுக்கு அறிவித்திருக்கிறேன். ஆகையால்: அதோ, வனாந்தரத்தில் இருக்கிறார் என்று சொல்வார்களானால் புறப்படாதிருங்கள்; இதோ, அறைவீட்டிற்குள் இருக்கிறார் என்று சொல்வார்களானால் நம்பாதிருங்கள். மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்கு வரைக்கும் பிரகாசிக்கிறதுபோல, மனுஷகுமாரனுடைய வருகையும் இருக்கும். ”**

~மத்தேயு 24:23~28

ஆண்டவரை வருகையை பற்றி நன்றாய் தெரிந்து கொள்ளுபவர்கள் ஏமாறமாட்டார்கள். அவர் வரும்போது கோடான கோடி தேவ தூதர்களளோடுகூட வருவார். எக்காள சத்ததோடு வருவார். அவர் வரும்போது பத்தாயிரம் சூரியனை வானத்திலே தோன்றுவதுபோல பிரகாசமாயிருக்கும். குருடர்கள்கூட காண்பார்கள். அவரை எல்லோரும் காண்பார்கள்.

**“அப்பொழுது, மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். அப்பொழுது மனுஷகுமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள்மேல் வருகிறதை பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள்.”** ~மத்தேயு 24:30

இன்னொரு கூட்டத்தாரை பற்றி வேதம் என்ன சொல்லுகின்றது?

**“அக்காலத்திலே: இதோ, இவரே நம்முடைய தேவன்; இவருக்காகக் காத்திருந்தோம், இவர் நம்மை இரட்சிப்பார்; இவரே கர்த்தர், இவருக்காகக் காத்திருந்தோம்; இவருடைய ரட்சிப்பினால் களிகூர்ந்து மகிழுவோம் என்று சொல்லப்படும்.”** –ஏசாயா 25:9

பூமியின் பெரும்பான்மையான மக்களின் கோத்திரங்கள் ஆண்டவருடைய வருகையை கண்டு புலம்புபோது, அங்கே ஒரு சிறிய கூட்டத்தார் இதோ எங்கள் தேவன், இவருக்காக காத்திருந்தோம் என்று சொல்லுவார்கள். நாம் எந்த கூட்டத்தில் இருக்கிறோம்?



ஆண்டவருடைய வருகையை பற்றி யோவான் தரிசனத்திலே என்ன காண்கிறார்?

**“இதோ, மேகங்களுடனே வருகிறார்; கண்கள் யாவும் அவரைக் காணும், அவரைக் குத்தினவர்களும் அவரைக் காண்பார்கள்; பூமியின் கோத்திரத்தாரெல்லாரும் அவரைப் பார்த்துப் புலம்புவார்கள். அப்படியே ஆகும் ஆமென்.” –வெளி 1:7**

யாவரும் அவர் வருகையை காண்பார்கள். அவர் வந்துவிட்டார் என்று நாம் செய்திகளிலோ, டி.வியில் கேள்விப்படமாட்டோம், நம் சொந்த கண்களால் யாவரும் காண்போம். அவர் வருகை அநேகர் நினைக்கிறபடி இரகசியமாக இருக்காது. இதை பற்றி வேதத்தில் எந்தவொரு அத்தாட்சியுமில்லை. திருடனைபோல அவர் வருவார் என்று எட்டு முறை வேதத்திலே எழுதப்பட்டிருக்கிறது.

திருடனைபோல வருவார் என்பதின் அர்த்தம் என்ன?

**“திருடன் இன்ன ஜாமத்தில் வருவானென்று வீட்டெஜமான் அறிந்திருந்தால், அவன் விழித்திருந்து, தன் வீட்டைக் கன்னமிடவொட்டானென்று அறிவீர்கள். நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்; ஆதலால், நீங்களும் ஆயத்தமாயிருங்கள்.” –மத் 24:43,44**

திருடனைபோல வருவேன் என்று சொன்னபோது, அந்த உவமையை எதற்கு சொன்னாரென்றால், திருடன் வருகிற நேரம் நமக்கு தெரியாது, அதே போல ஆண்டவர் வருகிற நேரம் நமக்கு தெரியாது. ஆகவே அவர் வருகிற நேரத்திற்குதான் திருடனை ஒப்பிட்டு பேசினார் தவிர, திருடன் வருகிற வண்ணமாக ஒப்பிட்டு பேசவில்லை. திருடன் இன்ன ஜாமத்தில் வருவான் என்று அறியாமல் இருக்கிறமாதிரி, ஆண்டவர் இன்ன நேரத்தில் வருவார் என்று அறியாமலிருக்கிறீர்கள் என்று நேரத்தைதான் குறிப்பிட்டார். அதேபோல அவரின் வருகையின் நேரம் நமக்கு தெரியாது. மக்கள் அந்த நேரத்தை விட்டுவிட்டு, திருடன் வருகிறது யாருக்கும் தெரியாது, அதுமாதிரி ஆண்டவர் யாருக்கும் தெரியாமல் வந்துவிடுவார் என்று சொல்லுகிறார்கள்.

எதற்காக அவர் யாருக்கும் தெரியாமல் வரவேண்டும்? அவர் ஏதாகிலும் குற்றம் செய்துவிட்டாரா? அவமானப்பட்டுவிட்டாரா?

அண்டசராசரங்களெல்லாம் சாட்சியாக பார்த்து கொண்டிருக்க, உலகத்தின் மக்களின் பிரதிநிதிகள் அவரோகூட வருவார்களே, அப்படி எல்லா பிரபஞ்சத்திற்கு முன்பாக மகிமையோடும், மகத்துவத்தோடும், மாட்சிமையோடும், வருவதை விட்டுவிட்டு, திருடனை போல எதற்கு வரவேண்டும்? நான் வரும்போது எல்லா கண்களும் காணும் என்று சொல்லிவிட்டு திருடனைபோல வருவாரா?

சிலர் ஏழு வருஷம் அந்திகிறிஸ்து வருவார், அந்த அந்திகிறிஸ்துவின் ஆட்சியின்போது அவருடைய நம்பர் 666~ஆக இருக்கும், அப்பொழுதுதான் அந்த இரகசிய வருகை இருக்கும் என்று அநேகர் சொல்லுகிறார்கள்.

அந்திகிறிஸ்து கடைசிநாட்களிலே வருவான் என்று திருமறையிலே இருக்கிறதா? எந்த வசனமாவது சொல்லுகிறதா?

**“பிள்ளைகளே, இது கடைசிக்காலமாயிருக்கிறது; அந்திக்கிறிஸ்து வருகிறானென்று நீங்கள் கேள்விப்பட்டபடி இப்பொழுதும் அநேக அந்திக்கிறிஸ்துகள் இருக்கிறார்கள்; அதினாலே இது கடைசிக்காலமென்று அறிகிறோம்.”** –1 யோவான் 2:18

யோவானுடைய காலத்திலேயே அநேக அந்திகிறிஸ்துக்கள் இருக்கிறார்கள் என்று வேதம் சொல்லுகிறது. அப்பொழுதே வந்துவிட்டார்கள். கடைசிக்காலத்திலே வருவார்கள் என்று சொல்லவில்லை.



**“மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கைபண்ணாத அநேக வஞ்சகர் உலகத்திலே தோன்றியிருக்கிறார்கள்; இப்படிப்பட்டவனே வஞ்சகனும் அந்திக்கிறிஸ்துவுமாயிருக் கிறான்.”** ~2 யோவான் 1:7

அந்திகிறிஸ்துவாயிருக்கிறவர்கள் அநேகர் அப்பொழுதே உலகத்தில் தோன்றியிருக் கிறார்கள் என்று ஆண்டவர் வெகு திட்டவட்டமாக சொல்லிவிட்டார். அந்த கிறிஸ்துவின் நம்பர் 666 என்று சொல்லுகிறார்கள். அந்த நம்பரை பற்றி வேதம் சொல்லுகிறதா?

**“அந்த மிருகத்தின் முத்திரையையாவது அதின் நாமத்தையாவது அதின் நாமத்தின் இலக்கத்தையாவது தரித்துக்கொள்ளுகிறவன் தவிர வேறொருவனும் கொள்ளவும் விற்கவுங் கூடாதபடிக்கும் செய்தது. இதிலே ஞானம் விளங்கும்; அந்த மிருகத்தின் இலக்கத்தைப் புத்தியுடையவன் கணக்குப்பார்க்கக்கடவன்; அது மனுஷருடைய இலக்கமாயிருக்கிறது; அதினுடைய இலக்கம் அறுநூற்றறுபத்தாறு.”** –வெளி 13:17,18

மிருகம் என்றால் என்ன? அதனுடைய தார்ப்பரியம் என்ன? என்று “மிருகத்தின் முத்திரை” என்று நான் எழுதிய புத்தகங்களை வாங்கி படியுங்கள். அதனுடைய விளக்கம் அந்த புத்தகத்தில் இருக்கிறது.

அந்த மிருகத்தின் லக்கம்தான் 666. அந்த மிருகம் ஒரு மனுஷன், ஆனால் அந்திகிறிஸ்து அநேகர் என்று வேதம் சொல்லுகிறது.

ஆண்டவர் வருவதற்கு சற்று முன்பாக, பிசாசானவன் தன்னுடைய சுயரூபத்தோடு, உலகத்தில் ஆண்டவரின் உருவப்படத்தின் உருவத்தை எடுத்து கொண்டு, தன்னுடைய தூதர்களோடு, எக்காள சத்தத்தோடு, வானத்தின் மேகங்களின் மேலே வருவான். அவன் வந்து அநேக இடங்களிலே பூமியிலே இறங்கி, ஜனங்களை ஆசீர்வதித்து, அவர்களுக்கு போதித்து, ஏராளமான அற்புதங்களையும், அடையாளங்களையும் செய்வான், அவனை பார்ப்பதற்கு ஆண்டவரைபோல இருப்பான். ஆகவே இதோ கிறிஸ்து அமெரிக்காவில் வந்துவிட்டார், லண்டனிலே வந்துவிட்டார், இந்தியாவிற்கு வந்துவிட்டார், என்று சொன்னால் போகாதீர்கள் என்று வேதம் சொல்லுகிறது. இதோ முன்னதாகவே உங்களுக்கு சொல்லுகிறேன் என்று ஆண்டவர் சொல்லுகிறார்.


ஆண்டவர் இரண்டாவது முறை வரும்போது ஆகாயத்தில்தான் இருப்பார். பூமியிலே காலை வைக்கமாட்டார். தேவதூதர்களை அனுப்பி தன்னுடைய பிள்ளைகளை அழைத்து செல்வார். ஆனால் இந்த கள்ளக்கிறிஸ்துக்கள் பூமியிலே வந்து அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்து, தாங்கள்தான் இயேசு கிறிஸ்து என்று சொல்லி, ஜனங்களை ஏமாற்றிவிடுவார்கள் என்று வேதம் சொல்லுகிறது. இதைகுறித்து ஆண்டவர் நீங்கள் விசேஷமாக ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் என்று சொல்லுகிறார்.

இந்த உலகம் முடியும் முன்பு, வரபோகிற அழிவுக்கு தப்பித்து கொள்ளவேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார். இவ்வளவு எச்சரிப்புகளை கொடுத்தும் நாம் அசட்டையாக இருந்தால், நாம் அழிவு வரும்போது கதறி அழுது, ஏமாந்துவிட்டேனே, என்று சொல்லவேண்டுமா? அல்லது இவருக்காகதான் நான் காத்துக்கொண்டிருந்தேன் என்று சொல்வோமா? பரிசுத்தமாய் வாழ்வோம் **~ஆமென்**



மிருகத்தின் முத்திரை என்ற புத்தகத்தை படிக்க தவறாதீர்கள்.




பரலோகத்திலிருக்கிற என்
பிதாவின் சித்தத்தின்படி
செய்கிறவனே பரலோக
ராஜ்யத்தில் பிரவேசிப்பானே
யல்லாமல், என்னை நோக்கி:
கர்த்தாவே! கர்த்தாவே! என்று
சொல்லுகிறவன் அதில்
பிரவேசிப்பதில்லை.
மத்தேயு 7:21


என் தேவனாகிய கர்த்தர்
வருவார்; தேவரீரோடே
எல்லாப் பரிசுத்தவான்களும்
வருவார்கள்.
சகரியா 14:5


இதோ கர்த்தருடைய நாள்
வருகிறது, உன்னில்
கொள்ளையானது உன்
நடுவிலே பங்கிடப்படும்.
சகரியா 14:1